கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

முன்னிலை:– திரு. எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05 ஆம் நாள் புதன்கிழமை

<u>இடைநிலை மனு எண்.4/2025</u>
அதன்
<u>அசல் வழக்கு எண்.260/2025</u>
( CNR No.TNTS 01 005488 2025 )

சீனிப்பாண்டியன் ... மனுதாரர்/வாதி

..எதிர்..

1. மாரியப்பன்
2. சார்பதிவாளர்,
   சார்பதிவாளர் அலுவலகம், சுரண்டை
3. சேர்மன், த/பெ கிருஷ்ணசாமி
4. சங்கரபாண்டியன்
5. சேர்மன், த/பெ பொன்னையா

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனுவானது கடந்த 30.07.2026 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.D.புகழ்வேந்தன் அவர்களும், 1வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.முருகன் அவர்களும், 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. பி.கோபாலகிருஷ்ணன் அவர்களும், 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. பி.இராதாகிருஷ்ணன் அவர்களும் முன்னிலையாகியுள்ள நிலையில், 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் முன்னதாக அரசு வழக்கறிஞர் திரு.ஜே.எம்.இருதய ராஜ் அவர்கள் முன்னிலையாகியுள்ள நிலையில், பின்னிட்டு 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்வதற்கு வாய்தா ஏற்பட்டிருந்த தருணத்தில் 2 வது எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பாராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி முன்னிலையாகியுள்ள வழக்கறிஞர்கள் நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>உத்தரவு</u>

இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 39 விதிகள் 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ், தபசில் சொத்தைப் பொறுத்து 1வது எதிர்மனுதாரரின் வாரிசு நிலையில் 2வது எதிர்மனுதாரர் மூலம் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் எவ்வித வில்லங்கப் பாராதீனமும் செய்யக் கூடாதென எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பிறப்பித்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்</u>**:–

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். 1வது எதிர்மனுதாரரின் மனைவி பாப்பா என்பவர் மனுதாரரிடம் 10.10.2023 ஆம் தேதியன்று ரூ.70,00,000/– ரொக்கக் கடனாகப் பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு வட்டி ரூ.1/– வீதம் வட்டி சேர்த்து தருவதாக ஒப்புக்கொண்டும், 1வது எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்த ஆவணங்களை ஒப்படைப்பு செய்து 10.10.2023 தேதியிட்டு புரோநோட்டு ஒன்றும் பிறப்பித்துக் கொடுத்துள்ளார். மேற்படியார் சிறிது காலத்தில் இறந்துவிட்டதால் மனுதாரர், 1வது எதிர்மனுதாரரிடம் கடன் தொகையை செலுத்தக்கோரியதில், 1வது எதிர்மனுதாரர் நாள்கடத்தி வந்துவிட்டு, பின்னர் தபசில் சொத்துக்களைப் பொறுத்து 3 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு உயில் ஆவணம் மூலம் ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டார். மேற்படி உயிலை அனுசரித்து 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தபசில் சொத்தை வில்லங்கப் பாராதீனம் செய்ய முயற்சித்து வருகிறார்கள். 1வது எதிர்மனுதாரரின் மேற்படி செயலால் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக் கூடியதாக உள்ளது. எனவே அசல் வழக்கு முடியும் வரை 1வது எதிர்மனுதாரரின் வாரிசு நிலையில் 2வது எதிர்மனுதாரர் மூலமாக 3 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தபசில் சொத்தைப் பொறுத்து எவ்வித வில்லங்கப் பாராதீனமும் செய்யக் கூடாதென எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பிறப்பித்து உத்தரவிடக்கோரி இந்த மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **1வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்**:–

மனு சங்கதிகள் உண்மையானவைகள் கிடையாது. 1வது எதிர்மனுதாரரின் மனைவி பாப்பாப என்பவர் மனுதாரரிடமிருந்து எவ்வித தொகையும் எந்தக் காலத்திலும் கடனாகப் பெற்றதில்லை. மனுதாரர் குறிப்பிட்டுள்ள புரோநோட்டில் 1வது எதிர்மனுதாரரின் மனைவி கையெழுத்து போடவில்லை. கைரேகை வைத்ததாக குறிப்பிட்டு தாவா புரோநோட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1வது எதிர்மனுதாரரின் மனைவிக்கு நன்கு கையெழுத்து போடத் தெரியும். மனுதாரர் தாவா புரோநோட்டினை போலியாக உற்பத்தி செய்து அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. 4,5 பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை இந்த மனுவில் 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையாக ஏற்றுக்கொள்ளக்கோரி 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. 3வது எதிர்மனுதாரர் தரப்பில் 4, 5 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையானது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

6. **4, 5 பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:–**

பிராது சங்கதிகள் உண்மையானவைகள் கிடையாது. 1ஆம் பிரதிவாதி, வாதியிடமிருந்து கடந்த 10.10.2023 அன்றோ அல்லது வேறு எந்தத் தேதியிலோ ரூ.70,00,000/–மோ அல்லது வேறு எந்தத் தொகையோ கடனாகப் பெற்றதில்லை. அதற்கான அவசியமும் 1வது பிரதிவாதிக்கு ஏற்பட்டது கிடையாது. வாதி தாக்கல் செய்துள்ள 10.10.2023 தேதிய புரோநோட்டு உண்மையானது கிடையாது. வாதி தாக்கல் செய்துள்ள 09.05.2022 தேதிய கிரைய ஆவணத்திற்குரிய சொத்தானது விலை மதிப்பு அதிகமுடையதாகும். 1ஆம் பிரதிவாதியும், வாதியும் நெருங்கிய உறவினர்கள். 1ஆம் பிரதிவாதியின் மனைவி இறந்த சமயத்தில் வாதி, 1ஆம் பிரதிவாதியின் வீட்டிற்கு வந்து மேற்படி ஆவணத்தை எடுத்துச் சென்றுள்ளார். வாதி தாக்கல் செய்துள்ள 10.10.2023 தேதிய புரோநோட்டானது உற்பத்தி செய்யப்பட்ட ஆவணமாகும். 1ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து 1ஆம் பிரதிவாதி, இதர பிரதிவாதிகளுக்கு

03.06.2025 ஆம் தேதியன்று கிரையம் கொடுத்து விட்டு மேற்படியார்கள் தபசில் சொத்தின் அனுபவத்தில் உள்ள நிலையில் இந்த மனுவானது நிலைக்கக் கூடியதல்ல. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்

'இம்'மனு அனுமதிக்கக் கூடியதா?"

என்பதே ஆகும்.

5. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>பிரச்சனைக்கான தீர்வு</u>:–

இந்த மனுவின் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், 1 வது எதிர்மனுதாரரின் மனைவி பாப்பா என்பவர் மனுதாரரிடம் 10.10.2023 ஆம் தேதியன்று ரூ.70,00,000/– ரொக்கக் கடனாகப் பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு வட்டி ரூ.1/– வீதம் வட்டி சேர்த்து தருவதாக ஒப்புக்கொண்டும், 1 வது எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்த ஆவணங்களை ஒப்படைப்பு செய்து 10.10.2023 தேதியிட்டு புரோநோட்டு ஒன்றும் பிறப்பித்துக் கொடுத்துள்ளதாகவும், மேற்படியார் சிறிது காலத்தில் இறந்துவிட்டதால் மனுதாரர், 1 வது எதிர்மனுதாரரிடம் கடன் தொகையை செலுத்தக்கோரியதில், 1 வது எதிர்மனுதாரர் நாள்கடத்தி வந்துவிட்டு, பின்னர் தபசில் சொத்துக்களைப் பொறுத்து 3 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு உயில் ஆவணம் மூலம் ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டதாகவும், மேற்படி உயிலை அனுசரித்து 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தபசில் சொத்தை வில்லங்கப் பாராதீனம் செய்ய முயற்சித்து வருவதாகவும், 1 வது எதிர்மனுதாரரின் மேற்படி செயலால் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக் கூடியதாக உள்ளதாகவும், எனவே அசல் வழக்கு முடியும் வரை 1 வது எதிர்மனுதாரரின் வாரிசு நிலையில் 2 வது எதிர்மனுதாரர் மூலமாக 3 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தபசில் சொத்தைப் பொறுத்து எவ்வித வில்லங்கப் பாராதீனமும் செய்யக் கூடாதென எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பிறப்பித்து உத்தரவிட வேண்டியது அவசியம் என்றும் வாதிட்டிருக்கிறார்.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பில், 1ஆம் எதிர்மனுதாரரோ அவரது மனைவியோ மனுதாரரிடமிருந்து கடந்த 10.10.2023 அன்றோ அல்லது வேறு எந்தத் தேதியிலோ ரூ.70,00,000/-மோ அல்லது வேறு எந்தத் தொகையோ கடனாகப் பெற்றதில்லை என்றும், அதற்கான அவசியமும் 1வது எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டது கிடையாது என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள 10.10.2023 தேதிய புரோநோட்டு உண்மையானது கிடையாது என்றும், 1ஆம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து 1ஆம் எதிர்மனுதாரர் இதர எதிர்மனுதாரர்களுக்கு 03.06.2025 ஆம் தேதியன்று கிரையம் கொடுத்து விட்டு மேற்படியார்கள் தபசில் சொத்தின் அனுபவத்தில் உள்ள நிலையில் இந்த மனுவானது நிலைக்கக் கூடியதல்ல என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் எடுத்துரைக்கப்பட்டது.

8. இரு தரப்பு வாதமும், வழக்காவணங்களும் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரரின் வழக்கின்படி, 1ஆம் எதிர்மனுதாரரின் மனைவி பாப்பா என்பவர் 10.10.2023 அன்று ரூ.70,00,000/- கடனாகப் பெற்றுக்கொண்டு அதற்காக புரோநோட்டு எழுதிக் கொடுத்ததுடன், 1ஆம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான சொத்துக்களின் ஆவணங்களையும் ஒப்படைத்ததாகக் கூறப்படுகிறது. பின்னர் பாப்பா இறந்துவிட்டதால், கடன் தொகையை 1ஆம் எதிர்மனுதாரரிடம் கோரியபோது அவர் செலுத்தத் தவறியதுடன், தனது சொத்துக்களை உயில் மூலம் 3 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்துள்ளதாகவும், அவர்கள் தபசில் சொத்துக்களை வில்லங்கப் பாராதீனம் செய்ய முயற்சிப்பதாகவும் கூறி, வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை வழங்குமாறும் மனுதாரர் கோரியுள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில், 1ஆம் எதிர்மனுதாரரோ அல்லது அவரது மனைவியோ மனுதாரரிடமிருந்து எந்தக் காலத்திலும் ரூ.70,00,000/- அல்லது வேறு எந்தத் தொகையையும் கடனாகப் பெறவில்லை என்றும், மனுதாரர் முன்னிலைப்படுத்தும் 10.10.2023 தேதியிட்ட புரோநோட்டு போலியானது என்றும் மறுக்கப்பட்டுள்ளது. மேலும், 1ஆம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான தபசில் சொத்துக்கள் 03.06.2025 அன்று கிரையம் செய்யப்பட்டு, கிரையதாரர்கள் தற்போது சொத்தின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் உள்ள நிலையில், தற்போதைய மனுவில் கோரப்பட்டுள்ள பரிகாரத்தை வழங்க இயலாது என்றும் வாதிடப்பட்டுள்ளது.

9. இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்குவதற்கு, மனுதாரர் முதற்கட்டமாக அவருக்கு முதல்நோக்கு வழக்கு உள்ளதா?, மனுதாரருக்கு சமநிலை நோக்கு உள்ளதா? மற்றும் ஈடு செய்ய முடியாத இழப்பு உள்ளதா ? ஆகிய மூன்று அடிப்படை அம்சங்களையும் ஆராய வேண்டியது அவசியமாகும். இவ்வழக்கில், மனுதாரரின் கோரிக்கைக்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள புரோநோட்டின் உண்மைத்தன்மையே எதிர்மனுதாரர்களால் முழுமையாக மறுக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணம் உண்மையானதா, அதனை நிறைவேற்றியது யார், அதன் அடிப்படையில் கடன் பரிவர்த்தனை நடைபெற்றதா என்ற சங்கதிகள் அனைத்தும் விசாரணையின் போது சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகளாகும். இம்மனுவில் அவற்றை தீர்மானிக்க இயலாது. மேலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில், தபசில் சொத்துக்கள் ஏற்கனவே 03.06.2025 அன்று கிரையம் செய்யப்பட்டு, கிரையதாரர்கள் சுவாதீனத்தில் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அத்தகைய நிலையில், தற்காலிக உறுத்துக்கட்டளை வழங்குவது மேற்கடி கிரையம் பெற்ற மூன்றாம் நபர்களின் உரிமைக்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்படுவதற்கு தேவையான முதன்மை தோற்ற வழக்கு, சமநிலை வசதி மற்றும் ஈடு செய்ய முடியாத இழப்பு ஆகியவற்றை மனுதாரர் தரப்பில் நிரூபிக்கத் தவறியுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்தச் சூழ்நிலையில் இந்த மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2026.08.05 18:08:03 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**<u>மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>**

இல்லை

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S
Date: 2026.08.05 18:08:12 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி
இடைநிலை மனு எண்.4/2025
அதன்
அசல் வழக்கு எண்.260/2025
உத்தரவு (நேரிய)

நாள்: 05.08.2026